**கவனிக்க**.*- 2020.07.31ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2188 - 2020 අගෝස්තු මස 07 වැනි සිකුරාදා - 2020.08.07**

*2188 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 878 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 891 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 895 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 881 | ஏல விற்பனைகள் | 900 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 885 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஓகத்து மாதம்14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


877-B 82046-405 (2020/ 08)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

### பெறுகை அறிவித்தல்

### இலங்கைப் புகையிரத சேவையின் மேல் மற்றும் வடக்கு (UPPER & NORTHERN) மாவட்டங்களுக்கு 9,550 கியூப் வழித்தட சல்லிக் கற்களை (Track Ballast) வழற்குவதற்கான பெறுகை

01. மேல் மற்றும் வடக்கு மாவட்டங்களிலுள்ள பின்வரும் இடங்களுக்கு 9,550 கியூப் வழித்தட சல்லிக் கற்களை வழங்குவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வழங்குநர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழு (மேல்நிலை) தலைவர் பெற்றுக் கொள்வார். உருப்படிகள் மதிப்பீடு செய்யப்பட்டு தனித்தனியாகக் கையளிக்கப்படும்.

| உருப்படி இல. | இடங்கள் | கியூப்கள் | விநியோகக் காலம் |
|---|---|---|---|
| 01. | மாத்தளை | 2000 | 12 மாதங்கள் |
| 02. | கட்டுகஸ்தோட்டை | 500 | 04 மாதங்கள் |
| 03. | நாவலப்பிட்டி | 500 | 04 மாதங்கள் |
| 04. | வட்டவளை | 1500 | 08 மாதங்கள் |
| 05. | ஹற்றன் | 200 | 02 மாதங்கள் |
| 06. | கொட்டவல | 50 | 01 மாதம் |
| 07. | தலவாக்கலை | 100 | 01 மாதம் |
| 08. | வட்டகொட | 100 | 01 மாதம் |
| 09. | அம்பேவல | 1000 | 06 மாதங்கள் |
| 10. | பட்டிபொல | 400 | 04 மாதங்கள் |
| 11. | ஹப்புத்தளை | 500 | 04 மாதங்கள் |
| 12. | பண்டாரவளை | 200 | 02 மாதங்கள் |
| 13. | ஹீல்ஓய | 1000 | 06 மாதங்கள் |
| 14. | எல்ல | 200 | 02 மாதங்கள் |
| 15. | தெமோதர | 200 | 02 மாதங்கள் |
| 16. | ஹாலிஎல | 200 | 02 மாதங்கள் |
| 17. | பதுளை | 500 | 04 மாதங்கள் |
| 18. | மாஹோ | 200 | 02 மாதங்கள் |
| 19. | அநுராதபுரம் | 200 | 02 மாதங்கள் |

02. மீளளிக்கப்படாத கட்டணமாக 16,000.00 ரூபாவை ஆவணக் கட்டமாகச் செலுத்துவதன் பேரில் 2020.08.18 ஆந் தகிதி பி.ப. 3.00 மணி வரையில் இலங்கையில் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்க்கப்படல் வேண்டும்.

03. 2020.08.19 ஆந் தியதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்கும் காலம் முடிவுறும்.

04. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகளின் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்தில் வைத்து விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்த உடனடியாகவே அவை திறக்கப்படும். விலைகூறுநர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமாயிருக்கும்படி கோரப்படுகின்றார்.

05. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ பின்வருபவருக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,(மேல் நிலை)
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.

06. விலைமனு ஆவணங்களை, இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொலைபேசி இல. : 94(11) 2438078 / 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr.@ gmail.com
இணையத்தளம் : www. railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (மேல்நிலை),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இலக்கம்.- SRS/F. 7732

7- 133

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**இயந்திரக் கழிவு எண்ணெய் மற்றும் வெற்று பரல்களை அகற்றல்**

SRS/F.7735

01. இலங்கை புகையிரத சேவையின் பின்வரும் அமைவிடங்களில் வைக்கப்பட்டுள்ள கழிவு எண்ணெய் மற்றும் வெற்று பரல்களை ஒரு வருட காலத்திற்கு அகற்றுவதற்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை புகையிரத சேவைகளின் உயர் மட்ட திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார்.

| | அம்சங்கள் | ஒரு வருடத்திற்கான ஆகக் குறைந்த அளவு | அமைவிடங்கள் | | |
|---|---|---|---|---|---|
| 01. | வெற்று பரல்கள் (210 லீற்றர் பரல்) | 300 | இரத்மலானை பிரதான பொறியியல் பொறியியலாளரின் உப திணைக்களம் | தெமட்டகொட CEM இன் உப திணைக்களம் | மருதானை புகையிரத களஞ்சியசாலை |
| 02. | இயந்திரக் கழிவு எண்ணெய் | 10,000 லீற்றர்கள் | மருதானை மற்றும் இரத்மலானை புகையிரத களஞ்சியசாலை | | |

02. 2020.08.18 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

03. 2020.08.17 ஆந் தியதியன்று பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 3,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

*04. விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ஐம்பதினாயிரம் (ரூபா 50,000.00) விலைமனுப்பிணையொன்றாக விலைமனுவுடன் முன்வைத்தல் வேண்டும்.*

*05. புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்களை மூடிய பின்னர் அவை உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.*

*06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம்.*

*தலைவர்,*
*திணைக்களப் பெறுகைக் குழு,( உயர் மட்டம்)*
*இலங்கை புகையிரத சேவைகள்,*
*புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,*
*ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.*

*07.புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரீட்சிக்கப்படலாம்.*

*தொலைபேசி இல. : 94(11) 2438078 / 94(11)2436818.*
*தொலைநகல் இல. : 94(11) 2432044.*

*தலைவர்,*
*திணைக்களப் பெறுகைக் குழு (மேல்நிலை),*
*இலங்கைப் புகையிரத சேவைகள்.*

*குறியீட்டு இலக்கம்.-* SRS/F. 7735

*8- 134*

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்

## பெறுகை அறிவித்தல்

## இலங்கைப் புகையிரத சேவைக்கு 1,50.000 எண்ணிக்கையான GRN இன்சுலேட்டர்களுக்கான பெறுகை

*01. இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக்குழு (உயர் மட்டம்) தலைவர் 150,000 எண்ணிக்கையான* GRN *இன்சுலேட்டர்களை வழங்குவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வெளிநாட்டுத் தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார். விலைமனுதாரர்கள் தங்களது விலைமனுக்களை நேரடியாக அல்லது அற்றோணித்தத்துவம் அளிக்கப்பட்டவர்களுமான அதிகாரமளிக்கப்பட்ட இலங்கையில் பதிவு செய்யப்பட்ட முகவர்களின் ஊடாகச் சமர்ப்பிக்கலாம். உருப்படிகள் மதிப்பீடு செய்யப்பட்டு ஒன்றாக கையளிக்கப்படும்.*

*02. இலங்கை ரூபாவில் இரண்டாயிரத்து ஐந்நூறு (ரூபா 2,500.00) மட்டும் அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக் கூடியதுமான வெளிநாட்டு நாணயத்தை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்துவதன் பேரில் 2020.09.03 ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையில் (இலங்கை நேரம்) இலங்கையில் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*03. 2020.09.04 ஆந் தியதியன்று பி.ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடையும்.*

*04. தயாரிப்பு /வழங்கலானது* ISO *9001:2008 எனும் தரச்சான்றிதழ் அளிக்கப்பட்டவையான அல்லது அதற்குச் சமமான வகையில் கொள்வனவு செய்பவருக்கு ஏற்புடையதான சர்வதேச தர முகாமைத்துவ முறைமைக்குரிய நியமச் சான்றிதழ் பெற்றுள்ளவையான நிறுவனங்களினால் மட்டுமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.*

05. இலங்கை புகையிரத சேவைகளின் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்தில் வைத்து, விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்ததும் உடனடியாகவே அவை திறக்கப்படும். விலை கூறுநர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ பின்வருபவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,( உயர் மட்டம்)
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.

07. விலை ஆவணங்களை புகையிரத சேவைகள் களஞ்சியங்களின் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக தகவல்கள் தேவைப்படுமாயின் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. : 94(11) 2438078 / 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr.@ gmail.com
இணையத்தளம் : www. railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இலக்கம்.- SRS/F. 7719

8- 135

---

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் -மட்டக்களப்பு

### பகிரங்க ஏல விற்பனை

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2020.08.15 ஆந் திகதியன்று காலை 9.00. மணிக்கு மட்டக்களப்பு நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டு பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம்மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏ.சீ. ரிஸ்வான்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
2020.07.17.

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்**

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகன பதிவு இல. | சான்றுப் பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 60066/S/20 | EP YK - 3781 | முச்சக்கர வண்டி | 01 |
| 2. | AR 50/20 | EP VW - 0557 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3. | AR 50/20 | EP UB - 3787 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 |
| 4. | 41348/MT/ 16 | EP MB - 2546 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 |
| 5. | 59105/MT/19 | WP WK - 0525 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6. | 59129/MT/20 | 49CC | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 |
| 7. | 60087/E/20 | EP BCR - 8972 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 8. | 60269/E/20 | EP BHW - 9168 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 9. | 60334/E/20 | EP BGH - 0707 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 10. | 60412/E/20 | EP BEL - 6208 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 11. | 60918/S/20 | | சவள் | 01 |
| 12. | 60917/S/20 | | சவள் | 01 |
| 13. | 60898/S/20 | | சவள் | 01 |
| 14. | 60473/S/20 | | சவள் | 01 |
| 15. | 60525/S/20 | | சவள் | 01 |
| 16. | 61119/S/20 | | சவள் | 01 |
| 17. | 60951/S/20 | | சவள் | 01 |
| 18. | 61107/F/20 | | அறுவைக் கத்தி | 01 |
| 19. | 61108/F/20 | | அறுவைக் கத்தி | 01 |
| 20. | 61109/F/20 | | அறுவைக் கத்தி | 01 |
| 21. | AR 418/20 | | வெற்று பரல் | 20 |
| 22. | 60409/E/20 | | வெற்று பரல் | 01 |
| 23. | 60818/ S/20 | | பிளாஸ்டிக் மேசை | 01 |
| 24. | 61169/S/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகன பதிவு இல. | சான்றுப் பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 25. | 61170/S/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 26. | 61171/S/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |

*8- 33*

---

## நீதிவான் நீதிமன்றம் -சம்மாந்துறை

## பகிரங்க ஏல விற்பனை

*சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2020.08.22 ஆந் திகதியன்று காலை 9.30. மணிக்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.*

*இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.30 மணிமுதல் 9.30 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டு பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.*

*இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம்மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*ஏல விற்பனையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.*

*ஏல விற்பனையின் போது கலந்து கொள்ளும் அனைவரும் COVID -19 தொற்று நோய் பரவலைத் தடுக்கும் வகையில் சுகாதார வழிமுறைகளைப் பேணிப் பின்பற்ற வேண்டும்.*

எம். ஐ. எம். ரிஸ்வி,
*நீதிவான்.*

*நீதிவான் நீதிமன்றம்,*
*சம்மாந்துறை,*
*2020.07.23.*

### ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்

| தொ. இல. | வழக்கு இலக்கம் | பதிவு இலக்கம் | சான்றுப் பொருள் வகை | சான்றுப்பொருளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01. | AR/2291 | Chassis No. M****MF7A1B20423<br>Engine No. CFSP1397416 | மோட்டார் சைக்கிள் ( உதிரிப்பாகங்கள்) | 01 |
| 02. | AR/2248 | EP - HC - 9939<br>EP - MO - 7934 | மோட்டார் சைக்கிள் ( உதிரிப்பாகங்கள்)<br>மோட்டார் சைக்கிள் ( உதிரிப்பாகங்கள்) | 01<br>01 |
| 03. | AR/1894 | EP - JK - 0840 | மோட்டார் சைக்கிள் ( உதிரிப்பாகங்கள்) | 01 |

| தா. இல. | வழக்கு இலக்கம் | பதிவு இலக்கம் | சான்றுப் பொருள் வகை | சான்றுப்பொருளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 04. | AR /2295 | EP - JJ - 4456 | மோட்டார் சைக்கிள் ( உதரிப்பாகங்கள்) | 01 |
| 05. | AR/2297 | (இலக்கம் எதுவுமில்லை) | வண்டில் | 01 |
| 06. | 21578/PC/19 | EMI NO - 359766094031413 | சம்சுங் கையடக்கத் தொலைபேசி | 01 |
| | | EMI NO - 359789094031411 | | |
| | | EMI NO - 861709041439716 | ஹுவாவி கையடக்கத் தொலைபேசி | 01 |
| | | EMI NO - 86709041473723 | | |
| 07. | 24424/MISC | | சவள் | 01 |
| 08. | 24065/MISC | | சவள் | 02 |
| 09. | 23645/MISC | | சவள் | 04 |
| 10. | 24021/MISC | | சவள் | 01 |
| 11. | 24026/MISC | | சவள் | 01 |
| 12. | 23894/MISC | | சவள் | 01 |
| 13. | 24022/MISC | | சவள் | 01 |
| 14. | 23986/MISC | | சவள் | 01 |
| 15. | 24245/MISC | | சவள் | 01 |
| 16. | 24425/MISC | | சவள் | 01 |
| 17. | 24628/MISC | | சவள் | 01 |
| 18. | 23626/MISC | | சவள் | 01 |
| 19. | 24350/MISC | | வாளி | 02 |
| 20. | 23983/MISC | | வாளி | 01 |
| 21. | 23682/MISC | | வாளி | 01 |
| 22. | 24427/MISC | | வாளி | 01 |
| 23. | 23627/MISC | | சவள் | 01 |
| 24. | 24082/MISC | | சவள் | 01 |
| | | | வாளி | 01 |
| 25. | 24039/MISC | | சவள் | 01 |
| | | | வாளி | 01 |
| 26. | 24041/MISC | | சவள் | 01 |
| | | | வாளி | 01 |
| 27. | 24228/MISC | | சவள் | 01 |
| | | | வாளி | 01 |

# ஆய விற்பனையும் குத்தகையும்

## உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் 2021 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு வழங்கல் -2021

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2021 ஆம் ஆண்டில் கள்ளுத் தவறணைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை கொள்வனவு செய்வதற்காக உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2020.08.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்துக் கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். என்பதுடன்-*

*(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும், மற்றும்*

*(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது.*

*கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-*

*(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும் ;*

*(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;*

*(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்க கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.*

*இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

*3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரங்கள் -*

*(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ; மற்றும்*

*(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.*

*என்பன இணைக்கப்பட்டு,*

*கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கம், பெயர், என்பவற்றைக்" குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.*

*4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத் தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைக் கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணைகளின் குத்தகைகள் 2020.09.28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விப் பத்திரங்கள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

ஆர்.ஏ.டீ.ரீ.என். தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை,
2020, யூலை 01.

**அட்டவணை**

2021 ஆம் ஆண்டிற்கான கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல்

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1. வஹுுக்கப்பிட்டிய கள்ளுத் தவறணை | உடபலாத்த | உடபலாத்த வஹுுக்கப்பிட்டிய கிராமத்திற்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2020.08.20ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை | 1,500.00 |
| 2. புஸ்ஸெல்லாவ கள்ளுத்தவறணை | உடபலாத்த | உடபலாத்த புஸ்ஸெல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2020.08.20ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை | 3,000.00 |

8-28/1

## இரத்தினபுரி மாவட்டத்தில் கள்ளுத்தவறணை ஏல விற்பனை - 2021

### பலாங்கொடை இல. 01 - கள்ளுத்தவறணை

2021ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையுள்ள கால எல்லைக்குள் இங்கு கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் சில்லறையாக கள்ளு விற்பதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் :-

(i) 1982.08.20 ஆந் திகதியுடைய இலக்கம் 207 வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏல விற்பனை நிபந்தனைகளின் படிவம்.

(ii) மதுவரிச்சட்ட நிபந்தனையில் காணப்பட்டுள்ள எல்லா மதுபான உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

2. எல்லா விலை மனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியின் பிரதேச செயலகம் - பலாங்கொடை எனும் கணக்கில் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்று 1,500 ரூபாவினை செலுத்தி பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணை எனக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. இலங்கையின் எல்லாப் பிரதேச செயலகங்களிலும் அல்லது கொழும்பு மதுவரித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் விலை மனு உரையையொட்டி (சீல் வைத்து) இடப்பக்க மேல் மூலையில் பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணைக்கான விலை மனு என்று தெளிவாகக் குறிப்பிட்டு விலை மனுத் திகதி முடிவடைய முன்பு பலாங்கொடை பிரதேச செயலகத்தின் விலைமனுப் பெட்டியில் அல்லது "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பலாங்கொடை" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

4. எல்லா விலை மனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலை மனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒருவர் ஒரு கள்ளுத்தவறணைக்கு மேல் விலை மனுக் கோர முடியாத அதே வேளை இருவர் சேர்ந்தும் கள்ளுத்தவறணைக்கு விலை மனுக் கோரமுடியாது.

6. விலை மனுக்காரரால் குறிப்பிடப்பட்ட விலை மனுவின் தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். விலைமனுக்காரர் எல்லா விலை மனுக்களிலும் கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். எல்லா விலை மனுக்களிலும் சாட்சியாளர் இருவரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிபந்தனைகளுக்குட்படாத விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலை மனுக்கோரலில் வெற்றிபெற்ற மனுக்காரர் விலை மனுவை வாங்கியவராகக் கருதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட பின் பலாங்கொடை பிரதேசச் செயலகத்தின் நிபந்தனைகளில் கையொப்பமிட்டு பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் பணத்தினை செயலகத்தில் வைப்பிலிட்டு கள்ளுத் தவறணையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

8. 2020.09.14 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும். விலை மனு கோரப்பட்டு முடிவடைந்ததும் விலை மனுப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் எல்லா விலை மனுதாரர்களும் குறிப்பிட்ட நேரத்தில் பலாங்கொடை பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

9. 2020.09.14 ஆந் திகதியன்று குறிப்பிட்ட நேரத்தில் இந்த விலை மனு நடைபெறாவிட்டால் அது மீண்டும் 2020.11.03ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

10. எந்தவொரு விபரமும் காட்டாது விலைமனுவை சொந்த விருப்பின் பேரில் நிராகரிக்கும் உரிமை பலாங்கொடை பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

11. 2020 ஆம் ஆண்டிற்கான தவறணை நடாத்தும் இடத்தில் இடத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதனைக் கூறமுடியாது. திறமையான விண்ணப்பக்காரரால் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தின் கட்டிடமொன்றை தேடிக்கொள்ள வேண்டும். அந்த கட்டிடத்திற்காக மதுபான ஆணையாளர் அவர்களின் அனுமதியைப் பெற வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுக்கொடுக்க ஆணையாளர் உடன்பாடில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

12. மாதாந்தக் கட்டணம் செலுத்திய பின் செலுத்தியதற்கான முத்திரை இடப்பட்டால் மட்டும் அனுமதிப்பத்திரத்தை குறித்த மாதத்திற்கு அனுமதிக்கப்படுவதோடு இல்லையெனில் அனுமதிப் பத்திரம் நிராகரிக்கப்பட்டதாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்

13. மேலதிக விபரங்களை பலாங்கொடை பிரதேச செயலகத்தில் கேட்டறிந்து கொள்ளலாம்.

எச். எம். எச். பண்டார,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2020, யூலை 08.

**அட்டவணை**

| கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | அமைவிடம் | கள்ளுத்தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் காலமும் |
|---|---|---|---|---|
| இல. 01 பலாங்கொடை | பலாங்கொடை நகர எல்லை | பலாங்கொடை நகர சபைக்குட்பட்ட பிரதேசம் | மு. ப. 11.00 மணி முதல்- பி. ப. 2.00 மணி வரை பின் பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 2020.09.14 மு. ப. 10.30 மணி வரை |

8- 32

---

## ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2021

(2021, சனவரி 01 ஆந் திகதி முதல் 2021, திசெம்பர் 31 ஆந் திகதி வரை)

2021, சனவரி 01 ஆந் திகதி முதல் 2021, திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படுதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் "..................... இலக்க ......... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2020.09.22 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ஜா-எல பிரதேச செயலாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் ஜா-எல பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியினுள் இடல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2020.09.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் ஜா-எல பிரதேச செயலகத்துக்குச் சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்ய முடியாத தவறணைகளுள் 2020.11.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை நடைபெறும். அப்போது ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்களும் வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

7. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை ஜா-எல பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ.ஏ.ஏ.எச்.வீரசேகர,
பிரதேச செயலாளர்,
ஜா-எல.

பிரதேச செயலகம்,
ஜா-எல,
2019, யூலை 07.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | கந்தான | 2020.09.22 மு.ப. 10.30 மணிக்கு | 1,500 |
| 2. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | வெலிகம்பிட்டிய | 2020.09.22 மு.ப. 10.30 மணிக்கு | 1,500 |
| 3. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | கணுவன | 2020.09.22 மு.ப. 10.30 மணிக்கு | 4,000 |
| 4. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | மடமவத்த ஏக்கல | 2020.09.22 மு.ப. 10.30 மணிக்கு | 5,000 |
| 5. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | தடுகம | 2020.09.22 மு.ப. 10.30 மணிக்கு | 1,000 |

8-30

---

## கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை – 2021

கீழ்த் தரப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் 2021, சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்கும் பிரத்தியேக உரிமையினை வழங்குவதற்கு 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கமைவாகவும் நடைமுறையிலுள்ள பொது விதிகளுக்கமைவாகவும் இங்கு கீழே குறிப்பிட்டுள்ள விதிகளுக்கமைவாகவும் கேள்விப்பத்திரங்கள் 2020.09.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரக்காரரினால் ஏதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை இங்கு கீழுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர வைப்புப் பணத்தை செலுத்தியதற்காக பெறப்பட்ட பிரதேச அலுவலக பற்றுச்சீட்டுடன் கள்ளு விற்பனை நிபந்தனைகளுக்கமைவாகப் பெறப்பட்ட பெறுமதிச் சான்றுப்பத்திரத்துடன் பொறிக்கப்பட்டதும் இடது பக்க மேல் மூலையில் இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் தவறணையின் பெயரும் இலக்கமும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டதுமான கடித உறையில் இட்டு மேற்படி கேள்விப்பத்திரங்களை இப்பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது கட்டான பிரதேச செயலாளருக்கு விலாசமிட்டு பதிவுத் தபால் மூலம் இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும்.

கேள்விப்பத்திரத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் எதிரில் கேள்விப்பத்திரக்காரர் தமது கையொப்பத்தையிடுவதன் மூலம் அவற்றை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான தேவைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

கேள்விப்பத்திர முடிவுத்திகதியான 2020.09.25 ஆந்திகதியன்று முற்பகல் 10.30 மணிக்குஎல்லாக்கேள்விப்பத்திரதாரர்களும் கட்டான பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

எந்தவொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையோ எவ்வித காரணங்களையும் காட்டாது நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்குண்டு.

உரிய திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத் தவறணைகள் 2020.11.26 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் எவருடையது என்பதை அறிவித்தவுடன் அன்றைய தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக குத்தகையின் கேள்விப்பத்திரதாரர்கள் இரண்டு மாத வாடகைக்குக் குறையாது தீர்மானிக்கப்படும் தொகையைப் பிணைப்பணமாக கட்டான பிரதேச செயலாளருக்குச் செலுத்தி குத்தகை விற்பனைக்கான நிபந்தனைகளில் கையொப்பமிடல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானோர் அவற்றினை கட்டான பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஜீ. எச். எச். ஆர். கிரிஎல்ல,
பிரதேச செயலாளர்,
கட்டான.

பிரதேச செயலகம்,
கட்டான,
தெமங்ஹந்திய,
2020, யூலை 20.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | தவறணை அமைந்துள்ள உள்ளூராட்சிப் பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்பு பணம் ரூபா | கேள்விப்பத்திரம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | முக்கலன்கமுவை இல. 13 | கட்டான | முக்கலன்கமுவை கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 4,000 | 2020.09.25 மு.ப. 10.30 |
| 2. | கட்டுநாயக்க இல. 14 | கட்டான | கட்டுநாயக்க கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 4,000 | 2020.09.15 மு.ப. 10.30 |
| 3. | ஏத்கால இல. 13 | கட்டான | ஏத்கால கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 500 | 2020.09.25 மு.ப. 10.30 |
| 4. | கிழக்குக் கட்டான இல. 24 | கட்டான | கி. கட்டான கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 2,000 | 2020.09.25 மு.ப. 10.30 |
| 5. | தெமன்ஹந்திய இல. 27 | கட்டான | தெமன்ஹந்திய கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 2,000 | 2020.09.25 மு.ப. 10.30 |

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | தவறணை அமைந்துள்ள உள்ளூராட்சிப் பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்பு பணம் ரூபா | கேள்விப்பத்திரம் பொறுப்பேற்கும் இறுதித் திகதி யும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 6. | பம்புக்குளி இல. 26 | கட்டான | பம்புக்குளி கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 1,000 | 2020.09.25 மு.ப. 10.30 |

8-97

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 2020, யூலை 13 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : டிமோ லைஃப்லைன் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் இல.: பீவீ 00224261
பதிவு செய்த அலுவலகம் : இல. 65, ஜேத்தவனா வீதி, கொழும்பு 14

ஜேசி என்ட் கம்பனி,
கம்பனிச் செயலாளர்கள்.

இல.9/5, தம்பியா எவன்யூ,
கொழும்பு 7.

8- 104

---

## டெர்ஸ்மோ (பிரைவேட்) லிமிட்டட்
## கம்பனியின் பதிவு இல.பீவீ 102542

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1)இன் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : டெர்ஸ்மோ (பிரைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி : அசோகாராம வீதி, கூந்தெனிய, திக்வெல்ல
நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: HC (Civil) /74/2019/CO
கம்பனி கலைப்பாளர் பெயர்:Pinchabaduge Eksiri Aruna Jayewickreme & Gerard Jeevananthan David
முகவரி: Level 3, No. 11, Castle Lane,Colombo 4
நியமனத் திகதி: 2020.01.29

8- 131/1

## டெர்ஸ்மோ (பிரைவேட்) லிமிட்டட்
## கம்பனியின் பதிவு இல.பீவீ 102542

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII இன் கீழான கம்பனி கலைப்பு பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : டெர்ஸ்மோ (பிரைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி : அசோகாராம வீதி, கூந்தெனிய, திக்வெல்ல
நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: HC (Civil) /74/2019/CO

நீதிமன்ற கட்டளைத் திகதி : 2020.10.29
கோரிக்கை தாக்கல் செய்த திகதி : 2019.09.25
கம்பனி கலைப்பாளர் பெயர்:Pinchabaduge Eksiri Aruna Jayewickreme & Gerard Jeevananthan David
முகவரி: Level 3, No. 11, Castle Lane,Colombo 4

8- 131/2

---

## சிதாவக்க புறப்பட்டி மனேஜ்மன்ற் (பிரைவேட்) லிமிட்டட் (அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது)
## கம்பனியின் பதிவு இல. பீவீ 2537

கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் பிரிவுக்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் 15 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 11, 3 ஆம் மாடியில் அமைந்துள்ள Board Room இல் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தல்

பற்றிய விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அதாவது

1. ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது
2. கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை மற்றும்
3. இவைபற்றிய விளக்கம் அளித்தல்

ஜெராட் ஜீவானந்தன் டேவிட்,
கலைப்பாளர்.
சீதாவக்க புறப்பட்டி மனேஜ்மன்ட்
(பிரைவேட்) லிமிட்டெட்.

இலக்கம் 11, 3 ஆம் மாடி,
காசல் ஒழுங்கை,
கொழும்பு 4,
2020, யூலை 22.

8- 132

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சன்டிஸ் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம்: பீவீ 00223718
பதிவு செய்யப்பட்ட திகதி: 2020.07.04
கம்பனியின் முகவரி : இல. 76/பி, தோடன்வலபிட்டிய, பேராதெனிய

கம்பனியின் செயலாளர்.

2020.07.24.

8- 136

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : நிவ்லோக் இன்டஸ்றியல் (பீவீஏ) எல்டீடி
கம்பனியின் இலக்கம்: பீவீ 00224149
பதிவு செய்யப்பட்ட திகதி: 2020.07.12
கம்பனியின் முகவரி : இல. 52, நாகஹதென்ன, ஹரியலகம்மன, வெரெல்லகம

கம்பனியின் செயலாளர்.

2020.07.24.

8- 137

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : எனர்ஜி இவோல்வ்ட் (பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 119868
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.02.03
பதிவு முகவரி : இல. 320/6, காலி வீதி, கொழும்பு 3

கம்பனிப் பணிப்பாளர்.

8- 141

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : வன்டெக்சொலூஷன்ஸ் (பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 115478
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.08.02
பதிவு முகவரி : இல. 3-1/1, கின்றொஸ் அவின்யூ, கொழும்பு 4

கம்பனிப் பணிப்பாளர்.

8- 142

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஆர்ட்சி கெலேரியா ( பிவீடி) எல்டீடி
பதிவிலக்கம்: பீவீ 00224211
பதிவு முகவரி:390 E, பழைய கொட்டாவ வீதி, உடுஹமுல்ல, நுகேகொடை
தபால் குறியீடு : 10250

பணிப்பாளர் சபை,

2020, யூலை 20.

8- 161

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் அங்கொட, கொட்டிக்காவத்த, இல. 397/09 எனும் இடத்தில் குடியிருக்கும் மற்றும் தேசிய அடையாள அட்டை இல. 552422481V கொண்ட குருப்பு ஆராச்சிகே ரூபசிங்க ஆனந்த லால் ஆகிய நான், 2018, நவெம்பர் மாதம் நான்காம் திகதி கொழும்பில் பிரசித்த நொத்தாரிசு திருமதி மஞ்சுளா நிஷாந்தி ரூபசிங்க அவர்களால் எழுதி உறுதி செய்யப்பட்டதும் பதிவாளர் நாயக திணைக்களத்தின் பத்தரமுல்லை வட்டார அலுவலகத்தில் எழுத்து மூலமாக மற்றும் அற்றோணித் தத்துவ ஆவணத்தில் 256 ஆம் அத்தியாயத்தில் 14 ஆம் பதிவேட்டில் 20113 ஆம் தினக்குறிப்பேட்டின் கீழ் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி எழுதி பதிவுசெய்யப்பட்டதுமான அற்றோணித் தத்துவப் பத்திர இல. 1754 என்ற அற்றோணித்தத்துவம் மூலம் அங்கொட, கொட்டிக்காவத்த,இல. 397/09 என்ற இடத்தில் குடியிருக்கும் மற்றும் தேசிய அடையாள அட்டை இல. 926720384 V கொண்ட கத்யா பவித்ரிகா குருப்பு என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ அதிகாரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக இரத்துச் செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

8-26

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

அலவத்துகொட, அக்கர 40, இல.497 (முன்னர் கல்கிஸ்ஸ, காலி வீதி, இல. 363) என்ற இடத்தில் குடியிருக்கும் ரன்கொத் கெதர ரூபவதி (தே.அ.அ.இல. 507821979V) ஆகிய நான், 2016, செத்தெம்பர் மாதம் இருபத்தேழாம் திகதி கொழும்பில் பிரசித்த நொத்தாரிசு ஏ.பீ. அமில டீ. அம்பகல அவர்களால் எழுதி உறுதி செய்யப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திர இல. 1064 என்ற அற்றோணித் தத்துவப் பத்திரம் மூலம் அலவத்துகொட, அக்கர 40 என்ற இடத்தில் குடியிருக்கும் வீரசிங்க முதியான்சேலாகே சிறியாகாந்தி (தே.அ.அ.இல. 635233591V) என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவ அதிகாரத்தை, எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் 2020, மாச்சு 18 ஆந் திகதி அமுலாகும் வகையில் சட்டப்படியாக இரத்துச் செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இதன் பின்னர் வீரசிங்க முதியான்சேலாகே சிறியாகாந்தி என்பவர் மேற்படி அற்றோணித் தத்துவப் பத்திரம் மூலம் இதன் பின் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புப் கூற மாட்டேன் என அறியத்தருகின்றேன்.

ரன்கொத் கெதர ரூபவதி.

8-84

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வெலிவிட்ட, கடுவெல, இல. 139, (தற்போது கொழும்பு 04, லோரீஸ் வீதி, இல. 50) எனும் முகவரியில் வசிக்கும் தொன் ஒஸ்வல்ட் கெமிலஸ் விலத்கமுவ ஆகிய நான், கொழும்பு 4, லோரீஸ் வீதி, இல. 50 எனும் முகவரியில் வசிக்கும் நாணாயக் கார மாஹாபரனகே தொன் சந்திரசேன என்பவருக்கு வழங்கப்பட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர்.கே. எஸ். சுரேஸ் சந்திர என்பவரால் 1998.05.13 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அற்றோணி உத்தரவுப்பத்திரப் புத்தகத்தில் 200 ஆம் பிரிவு 49 ஆவது பத்திரத்தில் இலக்கம் 5396 இன் கீழ் 1999.07.09 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட 2205 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக மற்றும் அற்றோணித்தத்துவகாரரால் நாணாயக்கார மாஹா பரனகே தொன் சந்திரசேன என்பவரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

தொன் ஒஸ்வல்ட் கெமிலஸ் விலத்கமுவ.

8-164

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாகொல, மாகொல தெற்கு, இல. 232/1/3 எனும் முகவரியில் வசிக்கும் பெஸ்குவெல் ஹெந்தி சுனில் ஷாந்த மெண்டிஸ் (தே.அ.அ.இல. 663421948V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு ரஞ்ஜித் வங்ஷநாத சேனாதீர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 1240 மற்றும் 2014.10.20 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால் காலி, ஹிரம்புர, குறுக்கு வீதி, இல. 38/2G (தற்போது கேகாலை, கண்டி வீதி, மீபிட்டிய இல. 731, அலுரோமா என்டர்பிரைசஸ்) எனும் முகவரியில் வசிக்கும் அம்பன பல்லிய குருகே விஜயசிறி (தே.அ.அ.இல. 643561239V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் 2020.07.23 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

பெஸ்குவெல் ஹெந்தி சுனில் ஷாந்த மெண்டிஸ் .

8- 165

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இராஜகிரிய, மெத வெலிகடை வீதி, இல. 63/ 4 எனும் முகவரியில் வசிக்கும் நாகலந்தகே டிஷான் உதீஷ அல்விஸ் (தே.அ.அ.இல. 942480202V) ஆகிய நான்,இராஜகிரிய மெத

இராஜகிரிய மெத வெலிகடை வீதி, இல. 63/4 எனும் முகவரியில் வசிக்கும் துமிந்திரா சஜீவனீ ரத்னாயக்க என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு வேரகொட லியனகே கயனி நதீஷா பெரேரா என்பவரால் 23 ஆம் இலக்கமுடைய 2019.01.21 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு விசேட அற்றோணித்தத்துவம் 2020.07.23 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக மற்றும் அற்றோணித்தத்துவகாரரான துமிந்திரா சஜீவனீ ரத்னாயக்க என்பவரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்கின்றேன்.

நாகலந்தகே டிஷான் உதீஷ அல்விஸ்.

8-166

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வரல்ல, பெலவத்தை, ஹேன்யாய, இல. 117 என்னும் முகவரியில் வசிக்கும் மஹந் தெ ஆரச்சிகே அநுர ஆகிய பிரசித்த நொத்தாரிசு கல்ஹேனகே ரணபாஹு பெரேரா என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 778 மற்றும் 2019.09.30 ஆநி திகதி விசேட அற்றோணித்தத்துவத்தின் மூலம் மாலபே, மிஹிந்து மாவத்தை, இல. 566/7 என்னும் முகவரியில் குடியிருக்கும் கொழொம்பகே தோன சித்திரானி (தே.அ.அ.இல. 535364532V) என்பவரை எனது அற்றோணித்தத்துவகாரராக நியமித்ததை 2020.08.07 ஆந் திகதி முதல் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

கொழொம்பகே தோன சித்திரானி

.

8-292

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சீதுவை, மூகலன்கமுவ, நீர்கொழும்பு வீதி, இல. 531/2 இல் அமைந்துள்ள கொழும்பு கார்கோ எக்ஸ்பிரஸ் ( பதிவு இல. பி.வி. 7453) நிறுவனத்தின் இயக்குனர்களாகிய அனுககசர N 2428321 ஆம் இலக்கம் உடைய கடவுச்சீட்டு புத்தகத்தின் உரிமையாளர் மற்றும் டொன் சந்திரசோமகசர 093110566 ஆம் இலக்கம் உடைய கடவுச்சீட்டு புததகத்தின் உரிமையாளர்களாகிய நாங்கள், 880 என்ற இலக்கத்தையும் 2020, யூலை 28 ஆந் திகதி கொண்டதும் பிரசித்த நொத்தாரிசு சந்தனகுணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், கிருலப்பனை, மஸ்ஜித் வீதி, இல. 11 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் 58168180V என்ற தே.அ.அ. இலக்கத்தின் உரிமையாளருமாகிய மின்னேரி கமகே டொன் சமரகொடி பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது 2020, யூலை 31 ஆந் திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டு, இரத்துச் செய்யப்பட்டு மற்றும் ஒழிக்கப்பட்டுள்ளதென இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதனது பொதுக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

அனுககசர மற்றும் டொன்
சந்திரசோமகசர.

2020, யூலை 31.

8-294

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சீதுவை, மூகலன்கமுவ, நீர்கொழும்பு வீதி, இல. 531/2 இல் அமைந்துள்ள கொழும்பு கார்கோ எக்ஸ்பிரஸ் ( பதிவு இல. பி.வி. 7453) நிறுவனத்தின் இயக்குனர்களாகிய அனுககசர N 2428321 ஆம் இலக்கம் உடைய கடவுச்சீட்டு புத்தகத்தின் உரிமையாளர் மற்றும் டொன் சந்திரசோமகசர 093110566 ஆம் இலக்கம் உடைய கடவுச்சீட்டு புததகத்தின் உரிமையாளர்களாகிய நாங்கள், 881 என்ற இலக்கத்தையும் 2020, யூலை 28 ஆந் திகதி கொண்டதும் பிரசித்த நொத்தாரிசு சந்தனகுணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், கிருலப்பனை, மஸ்ஜித் வீதி, இல. 11 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் 581681801V என்றதே.அ.அ.இலக்கத்தின் உரிமையாளருமாகிய மின்னேரி கமகே டொன் சமரகொடி பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது 2020, யூலை 31 ஆந் திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டு, இரத்துச் செய்யப்பட்டு மற்றும் ஒழிக்கப்பட்டுள்ளதென இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதனது பொதுக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

அனுககசர் மற்றும் டொன்
சந்திரசோமகசர.

2020, யூலை 31.

8-295

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அவஸ்திரேலியாவில், No.22, Glenfern Street, Keyaborough Victoria 3173 (இலங்கையின் காலி , பிரதான வீதி, இல. 51) எனும் முகவரியில் வசிக்கும் சாமர மஹேஷ் கஹந்தகமகே (அவுஸ்திரேலியா கடவுச்சீட்டு இல. பீபி 1223803 ) ஆகிய நான், காலி, பிரதான வீதி, இல. 51 எனும் முகவரியில் வசிக்கும் லக்ஷ்மி சேரசிங்ஹ (தே.அ.அ.இல. 194656802353V) என்பவருக்கு வழங்கப்பட்ட காலி பிரசித்த நொத்தாரிசு எஸ்.எஸ். மனம்பேரி என்பவரால் 2004.08.02 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் காலி, காலி தெற்கு வலையக் அலுவலகத்தில் 4 ஆம் பிரிவு 46 ஆவது பத்திரத்தில் நாளேட்டு இலக்கம் 386 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட 3042 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவம் 2020.08.07 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக மற்றும்

*2020.08.07 ஆந் திகதியிலிருந்து அற்றோணித்தத்துவகாரரான லக்ஷ்மி சேரசிங்ஹ என்பவரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்கின்றேன்.*

*சாமர மஹேஷ் கஹந்தகமகே.*

*2020.08.07.*

*8-306*

---

## *அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்*

*பன்னிப்பிட்டிய, தெபானம, வீர மாவத்தை, தெனியவத்த வீதி, இல. 195/12/1 எனும் முகவரியில் வசிக்கும் கயாத்திரீ மதுஷா சமரதுங்க ( தே.அ.அ.இல. 8656800023V) ஆகிய நான், கம்முதலிந்துகே விமல் பிரியந்த சமரதுங்க என்பவருக்கு வழங்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அற்றோணி உத்தரவுப்பத்திரப் புத்தகத்தில் 296 ஆம் பிரிவு 144 ஆவது பத்திரத்தில் இலக்கம் 21284 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் 2019.12.17 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக மற்றும் அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*கயாத்திரீ மதுஷா சமரதுங்க*

*2020.08.07.*

*8-308*

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## *உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவு- 2021 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகைக்கு வழங்கல்*

*1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான வெளிநாட்டு மதுபான வகைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2021 ஆம் ஆண்டின் வெளிநாட்டுக் குடிவகைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வழங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2020.08.21ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் ; என்பதுடன்-*

*(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் ; மற்றும்*

*(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடம் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது.*

*கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-*

*(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;*

*(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;*

*(iii) அனைத்து திருத்தங்களுக்கும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்க கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.*

*இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரங்கள்,-

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ; மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

என்பன இணைக்கப்பட்டு கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய பிறநாட்டு மதுபான வகைகள் தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைப் படிவத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணை குத்தகை 2020.09.29 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்கள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

ஆர்.ஏ.டீ.ரி.என்.தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை,
2020, யூலை 01.

**அட்டவணை**

2021 ஆம் ஆண்டிற்கான கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகளின் பட்டியல்

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1. புஸ்ஸெல்லாவ வெளிநாட்டு மதுபானத் தவறணை | உடபலாத்த | புஸ்ஸெல்லாவ நகர எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2020.08.21 மு. ப. 10.30 மணி | 3,000 |

8-28/2

## அந்நிய மதுபானத் தவறணை குத்தகை விற்பனை- 2021

சிலாபம் பிரதேச செயலகப் பிரிவு

2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியினுள் இத்துடன் இணைத்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணைக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக, கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்விகளைச் சமர்ப்பிக்கப் படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % பெறுமதியான பெறுமதிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக மூடப்பட்ட உறையில் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "............................ இலக்கம்கொண்ட ........................ அந்நிய மதுபானத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" என குறிப்பிட்டு 2020.08 .27 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதனை இடுதல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம் திகதிக்கு முன் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. 2021 ஆம் ஆண்டுக்கான கேள்விப் பத்திரங்கள் சம்பந்தமாக 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணை குத்தகை நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2020.08.27 ஆந் திகதி மு.ப. 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் சகல கேள்விப்பத்திரதாரர்களும் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கமைவாக இதுவரை விற்கப்படாமல் ஏதாவது தவறணை இருப்பின் அவை 2020.09 .24 ஆந் திகதி மு.ப. 10.30. மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும்.

7. இது தொடர்பான மேலதிக விபரங்களை சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 032- 2223205 - 032-2222138.

பி. டப்.எம்.எம்.எஸ்.பண்டார,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்.
2020, யூலை 21.

### அட்டவணை

| பகுதி | கிராமம் | கேள்விப் பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும் | மீள் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் | தவறணை திறக்கும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா.ச. |
|---|---|---|---|---|---|
| சிலாபம் | இல. 07,<br>பிடிபன தெரு,<br>சிலாபம் | 2020.08.27<br>மு.ப. 10.30 | 2020.09. 24<br>மு.ப. 10.30 | மு.ப.11.00 மணி<br>பி.ப. 2.00 வரை<br>பி.ப.5.00 மணி<br>பி.ப. 8.00 வரை | 1,500.0 |

| பகுதி | கிராமம் | கேள்விப் பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும் | மீள் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் | தவறணை திறக்கும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா.ச. |
|---|---|---|---|---|---|
| சிலாபம் | இல. 06, பிடிபன தெரு, சிலாபம் | 2019.08.27 மு.ப. 10.30 | 2020.09. 24 மு.ப. 10.30 | மு.ப.11.00 மணி முதல் பி.ப. 2.00 வரை பி.ப.5.00 மணி பி.ப. 8.00 வரை | 1,500.0 |

8-79

---

## அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைக் குத்தகை விற்பனை-2021

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டிலும் அதற்குப் பிந்திய கால எல்லைக்குள் இங்கு காணப்படும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளதும் வெளிநாட்டு மதுபான தவறணைகள் (தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) குத்தகைக்குக் கொடுத்தல், 2021 ஆம் காலப்பகுதிக்குள் நிபந்தனைகளுக்கமைய வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் ( தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) தனி நபருக்கான சில்லறை விற்பனைக் குத்தகை கொடுப்பனவுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18ஆந் திகதி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள நேரம் வரை அம்பகமுவ பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. (அ) அனைத்துக் கேள்விப்பத்திரங்களும் ஏதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையான விண்ணப்பப்படிவமாக இருத்தல் வேண்டும்.*

(ஆ) நிரந்தர வைப்புப் பணமாக அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச் சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிராந்திய மேலதிக அரசாங்க அதிபரால்/ பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்வித் தாளில் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அசைவற்ற ஆதனங்களின் அத்தாட்சிப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் போது வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் நிபந்தனைகளுக்குட்டபட்டவாறாக கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கேள்விதாரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

i. கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

ii. பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்விப்பத்திரமானது கையொப்பமிடும் சாட்சிகளது தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

iii. கேள்விப் பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விதாரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

iv. சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர்கள் தமது தேசிய அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச் சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது மேல்மூலையில் தவறணைக்கான பெயரையும், இலக்கத்தையும் குறிப்பிட்டு அம்பகமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கேள்வி மனு செய்யப்பட வேண்டிய கால எல்லைக்குள் இடப்பட வேண்டும். தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவு தபாலில் அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்கு கேள்விதாரர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ மறுக்கவோ பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர்கள் விற்பனைத் தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் அம்பகமுவ பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட மூன்று மாத விற்பனைக்குக் குறையாத பிணைப்பணம் அம்பகமுவ பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப் பணம் "பிரதேச செயலாளர்" என்ற பெயரில் கினிகத்தேனை மக்கள் வங்கியில் நிரந்தர சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணமானது பணம், காசோலை அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்பட்ட பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்பட வேண்டும். தேவையான முத்திரைகள் செலுத்தி குத்தகைக்காரர்கள் நிபந்தனைகளினதும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

7.நியமிக்கும் தவணைக்கட்டணம் மாதாந்தக் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

9 . மேற்படி திகதியில் குத்தகைத் தவறணைகள் கொடுக்கப்படாத பட்சத்தில் 2020.11.10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்குக் கொடுப்பது சம்பந்தமாக இறுதித் தீர்மானம் பிரதேச செயலாளருடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் அம்பகமுவ கோரளை பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

**வெளிநாட்டு மதுபான தவறணைகள்**

| இலக்கமும் தவறணையின் பெயர் | தவறணை நிறுவப் பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் பெறப்படும் கால எல்லை | பிணைப்பணம் ரூ. ச. |
|---|---|---|---|
| 1. நோர்வூட் | நோர்வூட் நகர எல்லையில் 3 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2020.09.18 மு.ப.10.30 | 5,000.00 |
| 2. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 4 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2020.09.18 மு.ப.10.30 | 5,000.00 |
| 3. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 5 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2020.09.18 மு.ப.10.30 | 5,000.00 |

சிதாரா ருவினி கமகே,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளை,
2020, யூன் 24.

8-29

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஜீ. ஏ.பீ.கே. ரணசிங்க
கணக்கு இலக்கங்கள் : 0095 5000 2040

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2016.04.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2016.09.15 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2016.09.13 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே பதினைந்து இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து நாநூற்று எண்பத்தி இரண்டு ரூபா பதிமூன்று சதம் (ரூபா 1,15,72,482.13) 2016, மார்ச் 11 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஏழு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபா (ரூபா 1,07,80,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவர் மூலமாக 2020.09.03 ஆந் திகதி மு.ப. 11.00 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அத்தனகல்லை பதிவுப் பிரிவுகளுக்குள் உடுகாஹா பத்துவின், ஹப்பிட்டிகம் கோரளே மீரிகம பிரதேச சபை எல்லைகளுக்குள் மீரிகம பிரதேச செயலாளர் பிரிவிற்குள் கிரிஉள்ளகம கிராம அலுவலர் பிரிவு இல. 1A, இற்குள் கிரிஉள்ள கிராமத்தில் அமைந்த " கோன்காஹாலந்த எனும் ரேந்தபொலவத்த எனும் கோங்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஐ. கொட்டம்பகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, யூலை 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 188/2010 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. பீ. ஐ. அபேகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1994, ஏப்பிறல் 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 1066 எனும் வரைபடத்தின் லொட் 1 மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை); கிழக்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை); தெற்கு : சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் எச். சீ. டீ. மெல் என்பவரின் காணி மற்றும் ; மேற்கு: வரைப்பட இல. 1066 இன் லொட் 1 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட்கள் இருபத்தி ஒன்று தசம் மூன்று சைபர் பேர்ச். (0ஏ- 2றூ. 21.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப் பட்ட வரைப்பட இல. 188/2010 இற்கு அமைவாக அத்தனகல்ல காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் H51/105 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-155

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எச்.எல்.ஏ.மதுஷங்க
கணக்கு இலக்கங்கள் : 1029 5709 8940

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.11.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.02.21 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2020.02.12 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எண்பத்தி நான்கு இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரத்து நூற்று பதினேழு ரூபா பதினாறு சதம் (ரூபா 84,32,117.16) 2019, ஒற்றோபர் 30 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்தி எட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்று நாற்பத்தி இரண்டு ரூபா முப்பத்திரண்டு சதம் (ரூபா 78,58,142.32) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதிமூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள

வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2678 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவர் மூலமாக 2020.08.26 ஆந் திகதி மு.ப. 11.30 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், வடக்கு பிட்டிகல் கோரளே முன்னேஸ்வரம் பத்துவின் சிலாபம் பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் மாதம்பே பிரதேச செயலாளர் பிரிவின் கலஹிட்டியாவ கிராம அலுவலர் பிரிவின் கருக்குவ கிராமத்தில் அமைந்த "கருக்குவ வளவ்வ எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். ஏ பொன்சேக்கா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, யூலை 07ஆந் திகதியிடப்பட்ட இல. 0084 E எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு பிரதேச சபை வீதி (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்தின் லொட் 108); கிழக்கிற்கு: பிரதேச சபை வீதி (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்தின் லொட் 108); தெற்கிற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவால் தயாரிக்கப்பட்ட இல. 239B எனும் வரைபடத்தின் லொட்கள் 4 மற்றும் 5; மேற்கிற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்தின் லொட் 10, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் ஒரு பேர்ச் (0ஏ. 0றூ. 20.1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 0084 E எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட இலக்கம் 0084 E எனும் வரைப்படத்தில் காட்டப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

கூறப்பட்ட கருக்குவ கிராமத்தில் அமைந்த "கருக்குவ வளவ்வ எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஜீ. எஸ். பீ. பராக்ரம என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992, யூன் 01ஆந் திகதியிடப்பட்ட இல. 239B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 9 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு: லொட் 108; கிழக்கிற்கு: லொட் 108 ; தெற்கிற்கு: லொட்கள் 4 மற்றும் 5 மற்றும் மேற்கிற்கு : லொட் 10, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் ஒரு பேர்ச் (0ஏ. 0றூ. 20.1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 239 B எனும் வரைபடத்திற்கு அமைவாக சிலாபம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் F 85/109 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட இலக்கம் 239 B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 108 ஊடாகவும் அதன் மீதும் மேலும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளும் மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய அனைத்து உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-157

---

## பொலிஸ் மோப்ப நாய்கள் ஏல விற்பனை

பொலிஸ் திணைக்களத்திற்குச் சொந்தமான கீழ்க் காணப்படும் மோப்ப நாய்கள் 2020.08.15 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு கண்டி, அஸ்கிரிய பொலிஸ் மோப்ப நாய்கள் தலைமையகத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இம் மோப்ப நாய்களை அன்றைய தினம் காலை 8.00 மணிக்குப் பார்வையிடலாம்.

| இலக்கம் | இனம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | பெல்ஜியம் மெலனொயிஸ் | 05 | 07 | 12 |
| 2. | ஜெர்மன் ஷெபர்ட் | - | 01 | 01 |
| 3. | இங்லிஷ் ஸ்பெனியல் | 01 | - | 01 |
| 4. | ரொட்வயலர் | 02 | 01 | 03 |
| 5. | லெப்லடோர் ரிட்ரிவர் | 02 | 02 | 04 |
| 6. | டெல்மேஷன் | - | 02 | 02 |
| 7. | ரிச்பெக் | 01 | - | 01 |
| 8. | டெரியர் | 01 | - | 01 |
| | **மொத்தம்** | **12** | **13** | **25** |

டீ.ஏ.ஏ.பி.தெல்கஹபிடிய,
உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்.

பொலிஸ் மோப்ப நாய்கள் பிரிவு,
அஸ்கிரிய, கண்டி,
2020, யூலை 22.

8- 103

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை** www.documents.gov.lk **எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை – 2020***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒகத்து** | .. | வெள்ளி | 07.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.07.2020 |
| | | வெள்ளி | 14.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.07.2020 |
| | | வெள்ளி | 21.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.08.2020 |
| | | வெள்ளி | 28.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.08.2020 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 04.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2020 |
| | | வெள்ளி | 11.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2020 |
| | | வெள்ளி | 18.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.09.2020 |
| | | வெள்ளி | 25.09.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2020 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 02.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.09.2020 |
| | | வெள்ளி | 09.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.09.2020 |
| | | வெள்ளி | 16.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.10.2020 |
| | | வெள்ளி | 23.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.10.2020 |
| | | வியாழன் | 29.10.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.10.2020 |

**கங்காளி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.